**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.121/2026**

**PW - 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சந்தியா ( LW. 3) |
| Father's / Husband Name | : | க/பெ. ரவி |
| Village | : | மங்களபுரம் |
| Taluk | : | இராசிபுரம் |
| Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 04.08.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முன் விசாரணை:**

1) நான் தற்போது மங்களபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது கடந்த 07.03.2026ம் தேதி எனது தலைமையில் முதல்நிலைக் காவலர் ராமலிங்கம் மற்றும் முதல்நிலை காவலர் மேகன்ராஜ் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கண்காணித்து கொண்டு இளநகர், மாணிக்கம்பாளையம் வழியாக சென்று 15.30 மணி சுமாருக்கு மாணிக்கம்பாளையம், சாணார்பாளையம் வெங்கடாச்சலம் என்பவர் தோட்டத்திற்கு சென்றபோது அங்குள்ள பனஞ்சாரியில் இருந்து இடுப்பில் அல்லையில் கயிறு, கத்தி, பிளாஸ்டிக் குடுவையுடன் இறங்கி வந்தவரை பிடித்து விசாரிக்கையில் தனது பெயர் வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார், சாணார்பாளையம், புள்ளாக்கவுண்டம்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் என்று கூறி தான் அரசு தான் அரசு அனுமதியின்றி பனங்கள் இறக்கிய குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

2) பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி 15.35 மணிக்கு கைது செய்தேன்.

பின் எதிரி வைத்திருந்த சுமார் 5 லி பிடிக்க கூடிய பிளாஸ்டிக்குடுவையை பார்க்க அதில் புளித்த நுரையுடன் கூடிய சுமார் 3 லிட்டர் பனங்கள் இருந்தது. அந்த நேரத்தில் அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அதனை முதல்நிலைக்காவலர் ராமலிங்கம் மற்றும் முதல் நிலைக்காவலர் மேகன்ராஜ் அவர்கள் முன்னிலையிலும் 15.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றி உத்தரவுப்படி கைப்பற்றிய தடயங்களை அங்கேயே கொட்டி அழித்தேன். **மேற்படி கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் எதிரியுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைக்கப்பட்டு வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையக்குற்ற எண்.29/2026 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.1 நாமக்கல் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்னர் அன்றைய தினமே எதிரியை தக்க இருநபர் காவல் பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் ராமலிங்கம், மேகன்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே எதிரி மீது சட்டபிரிவு 4 (1)(C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4) காவல் ஆய்வாளரின் வாய்மொழி உத்தரவுப்படி சான்றுபொருட்கள் அழிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சான்றுப்பொருள் அழிப்பதற்கு முன்பாக கைப்பற்றிய பானம் என்னவென்று தெரிந்துகொள்வதற்கு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. சான்று பொருள் கெட்டுப்போய் துர்நாற்றம் வீசக்கூடும், நோய்களைப்பரப்பும் என்பதால் பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை. பழைய கெட்டுப்போன சோற்று கஞ்சி கூட புளித்த நுரையுடன் கூடிய வாடை வரும் என்றால் சரியல்ல. கள் இறக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சான்றுபொருட்களாக கைப்பற்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கள் இறக்கியதாக கூறப்படும் மரம் இருந்த நிலத்தின் உரிமையாளரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரி. மேற்படி நிலத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாததால் சேர்க்கவில்லை. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ளதுபோல் எதிரி குற்றச்செயல்லிலும் ஈடுபடவில்லை என்றும் அதனால் தான் கள் இறக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை கைப்பற்றவில்லை, அவர் குடுவையில் வைத்திருந்த பானம் பனங்கள்ளா அல்லது வேறு ஏதா என்று அறிவதற்கு

பரிசோதனை கூடத்திற்கு அனுப்பவில்லை, புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது ஒரு பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும், சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், அழிக்கப்படவும் இல்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது புகைப்படம் எடுத்திருப்போம் என்றும், கைப்பற்றுதல் குறித்து வீடியோ எடுக்கப்பட்டிருக்கும் என்றும், அதேபோல் அழித்தலும் புகைக்கப்படம் எடுக்கப்பட்டிருக்கும் என்றும், பொய் வழக்கு என்பதால் மேற்படி சங்கதிகள் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**–இல்லை.

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.08.04 18:40:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.